सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

### ஊடக அறிக்கை

### குருதேவ் இரவீந்திரநாத் தாகூர் நினைவு தினம்

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்தியாவின் தேசிய கீதமான “ஜன கண மன” பாடலை இயற்றியவருமான குருதேவ் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் ஜூன் மாதம் 1934 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த நாளை நினைவுகூருமுகமாகவும் மற்றும் அவரது 154வது பிறந்த நாள் நினைவு தினத்தை முன்னிட்டும் யாழ். இந்தியத் துணைத் தூதரகமானது ஓர் நினைவு தின வைபவத்தினை எதிர்வரும் சனிக்கிழமை, 13 ஜூன் 2015 அன்று காலை 9.30 மணிக்கு யாழ். பொது நூலக கலாச்சார மண்டபத்தில் நடாத்தவுள்ளது. இந் நிகழ்வுக்கான பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந் நிகழ்வில் குருதேவ் இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் கவிதைகள் வாசிப்பும், அவரது வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது சித்திரங்கள் பற்றிய விளக்க உரைகள் என்பனவும் யாழ்ப்பாணத்தின் முக்கிய கல்விமான்களால் நடாத்தப்படவிருக்கின்றது.

**08/06/2015**